எனவே, அவர்களாகவே கேட்டுக்கொள்ளும் அந்தத் திட்டங்களில் குடியமர்த்துகிறோம். ஆகவே, தவறு அவர்களுடையதுதானே தவிர, எங்களுடையது அல்ல.

Death of cattle in Taramani village

* 140 *Q*.—THIRU S. J. **SADIQ PASHA**: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether it has come to the notice of the Government regarding the sudden death of a number of Cattle in Taramani village near Adyar, Madras, recently; and

(*b*) if so, the reasons therefor and the remedial measures taken in this regard ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) ஆம்.

(ஆ) தரமணி கிராமத்தின் அருகிலுள்ள தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரை இரசாயன பரிசோதனை செய்ததில் அதில் "பாலிடால்" (Follidol) என்னும் பொருள் கலந்து இருப்பதாக அறியப்பட்டது. மேற்கூறிய பாலிடால் என்னும் விஷப் பொருளே கால்நடைகள் இறப்பதற்கு காரணமாக இருக்கலாம் என புலனாய்வு அறிக்கை கூறுகிறது. சென்னை மாநகராட்சி சுகாதார அலுவலர் மேற்கூறிய விஷப் பொருட்கள் மேற்கூறிய இடத்தில் கலவாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறும், அவ்வப்போது அந்தப் பகுதிகளில் உள்ள தண்ணீரை பரிசோதனை செய்யுமாறும் கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

சென்னை காவலர் குடியிருப்புகளுக்கான மின் கட்டணங்கள்.

வினா எண். 140 (அ)—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் காவல் துறையினர் குடியிருக்கும் அரசுக்குச் சொந்தமான குடியிருப்புகளுக்கு மின் கட்டணம் செலுத்துவதில் சலுகை அளிக்கப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: (அ) ஆம்.